3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், என்ன? சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நிறைய உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அவை என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. துறைகளிடமிருந்து பதில் வந்தவுடன், நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். துறையிடமிருந்து பதில் வந்தவுடன், நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) துறையிடமிருந்து பதில் வரட்டும், நான் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் வந்தவுடன், நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நேரம் இருக்கிறது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நிறைய உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நிறைய உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) உங்கள் இருக்கைக்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடு) முதலில், உங்கள் இருக்கைக்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடு) இதற்குத்தான் நான் பதில் சொல்கிறேன். நிறைய உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அவை அரசின் பரிசீலனையில்*

இருக்கின்றன. துறையிடமிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) என்னுடைய பரிசீலனையில் இருப்பதை, இப்போதே எடுத்துக்கொள்ளுங்கள் என்று நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) நீங்கள் இப்போதே எடுத்துக்கொள்ளுங்கள் என்று இவ்வாறு வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், என்ன, சொல்லுங்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: அரசு ஊழியர்கள் பிரச்சினை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. துறையிடமிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், சொல்லுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம் தொடர்பாக கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. துறையிடமிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன? (குறுக்கீடு) அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில், அவரவர் இருக்கைக்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடு) இவ்வாறு நடந்துகொள்வது முறையல்ல. (குறுக்கீடு) இப்படி நடந்துகொள்வதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடு) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

என்னுடைய ஆய்வில் இருக்கிற பொருளை, இப்போதே எடுத்துக்கொள்ளுங்கள் என்று நீங்கள் வற்புறுத்த முடியாது.

2016 பிப்ரவரி 17] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) கவன ஈர்ப்பு அறிவிப்புகள் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். அவை என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. அதை இப்போதே எடுத்துக்கொள்ளுங்கள் என்று நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) ஆய்வில் இருப்பதையெல்லாம் இப்போதே எடுத்துக்கொள்ளுங்கள் என்று நீங்கள் வற்புறுத்த முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு)

[தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள் (திரு. சி. மைக்கேல் ராயப்பன், திரு. செ. அருண் பாண்டியன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. க. தமிழழகன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. க. பாண்டியராஜன், திருமதி ஆர். சாந்தி மற்றும் திரு. மு. அருண் சுப்பிரமணியன் ஆகியோர் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]

[பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளியேறினார்.]

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஏழாவது முதல் முன்னூற்று இருபத்து மூன்றாவது வரையிலான இருபத்தேழு அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன். அதிகமான அறிக்கைகளை பேரவைக்கு சமர்ப்பித்துள்ள குழு எங்களது பொதுக் கணக்குக் குழு என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*